எம்.சி.ஓ.பி எண்: 5520/2021 தேதி: 22.07.2025

மசா. : 1

பெயர் : தரணிராஜ பூபதி

த/பெ. : ரவிச்சந்திரன்

வயது :28

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என் நண்பருக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றேன். புலிப்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு டவுனை நோக்கி சென்றுகொண்டிருந்தேன். தேசிய நெடுஞ்சாலையை கடந்துதான் செல்லவேண்டும் எ்னறால் சரி. பல்சர் வாகனம் எதிர் திசையில் பரணுரிலிருந்து செங்கல்பட்டு பைபாஸ்யில் சென்றது. எனக்கு முன்னால் ஒரு பெரிய வண்டி சென்றது. அந்த இடத்தில் அந்த நேரத்தில் சிக்னல் இல்லை. சிக்னல் இல்லாத நேரத்தில் யூடென் செய்பவர்தான் பார்த்து திரும்பவேண்டும். நிறையவாகனம் சென்றது. நான் திரும்பும்போது மோட்டார் வாகனத்தை இடித்தபிறகுதான் பார்த்தேன். பைபாஸ்யில் செல்லும் வாகனம்தான் நேராக செல்லவேண்டும் எ்னறாலும் நான் பயணம் செய்த வாகன ஓட்டியின் அஜாக்கிருதையால் விபத்து நடந்தது எ்னறால் சரியல்ல. இருசக்கரவாகனத்திற்கு முன்னால் சென்ற வாகனம் வேகமாகதான் சென்றது. நாங்கள்தான் பல வாகனங்கள் வருவதை கவனிக்காமல் திடீரென்று திரும்பி விட்டோம் என்பதால் எங்களுடைய அஜாக்கிருதைதான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. வண்டி ஓட்டியவர் நரேஷ். நான் பயணம் செய்த வண்டியின் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. நான் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை இந்த வழக்கில் சேர்த்து அவர்களிடமிருந்துதான் நான் இழப்பீடு பெறவேண்டும் எ்னறால் சரியல்ல. என் மனு நிலைநிக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கான விபத்து பதிவேட்டை தவிர வேறு அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மசாஆ 3 முதல் 5 ஆவணங்கள் நகல் என்பதால் அவை

உண்மை ஆவணம் இல்லை என்றாலும் அவை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டது என்றாலும் ஊனமோ, பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. தொழில், வருமானத்திற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து நான் பயணம் செய்த இருசக்கரவகான ஓட்டியின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.